17

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.மு. மதிமாறன், பி.இ.,

ந.க.எண். 6635/2019 மம 3

நாள். 24.01.2020

பொருள் : கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - மதுரை மண்டலம் - தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி/கிராமம் - போ.மீனாட்சிபுரம் (தெற்கு) திட்டப் பகுதி 1 - சர்வே எண். 264/3 மற்றும் 264/4 -ல் உள்ள 4850சமீ பரப்பளவுள்ள மனையிடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மாண்புமிகு பாரதப் பிரதமரின் PMAY-HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தரைத் தளம் + இரண்டு தளங்களுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. செயல் அலுவலர், போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி கடிதம், நக.எண். 99/2019, நாள். 13.11.2019 (இவ்வலுவலகத்தில் கடிதம் பெறப்பட்ட நாள். 2.12.2019)
2. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடிதம், நக.எண். 930/BM.1/Mdu/TPS/2019, நாள். 11.11.2019.
3. மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை, நக.எண். 14467/2018/ஆ4, நாள்.3.7.2019.
4. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.06.2004.
5. அரசாணை எண்(நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் முறை, நாள். 4.2.2019.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/பிஏ2, நாள்.06.11.2019.
7. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.22.01.2020 (நன்னிலை வரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்த கோரியது)
8. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடிதம், நக.எண். 930/BM.1/Mdu/TPS/2019, நாள். 22.01.2020. (நன்னிலை வரி வினம்பரப் பலகை கட்டணம் மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது).

*****

CHIEF ENGINEER
Project Monitoring Unit
Tamil Nadu Slum Clearance Board
No. 5, Kamarajar Salai,
Chennai-600 005.

Scanned with CamScanner

உத்தரவு :

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி / கிராமம், போ.மீனாட்சிபுரம் (தெற்கு) திட்டப்பகுதி-1, சர்வே எண்.264/3 மற்றும் 264/4-ல் உள்ள 4850 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்திற்கு "A முதல் H" வரை" என எல்லையிடப்பட்டு மனை ஒப்புதலும் அம்மனையில் உத்தேசிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கான மாண்புமிகு பாரத பிரதமரின் PMAY - HFA - AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களில் பிளாக் - A1 - A2 மற்றும் பிளாக் B1-B2 ஆகிய நான்கு பிளாக்குகளில் உள்ள 120 குடியிருப்பு கட்டிடங்களின் பரப்பளவு விவரம் கீழ்கண்டவாறு அமைகிறது.

**Area Details**

Area of the Site - 4850.00 ச.மீ

OSR - 506.37 ச.மீ

| S.No | Block Name | Ground Floor Area (Sq.m) | First Floor Area (Sq.m) | Second Floor Area (Sq.m) | Total Area (Sq.m) | No. of Tenements |
|---|---|---|---|---|---|---|
| 1 | Block (A1 - A2) | 300.07 x 2 = 600.14 | 300.07 x 2 = 600.14 | 300.07 x 2 = 600.14 | 1800.42 | 48 units |
| 2 | Block (B1 - B2) | 441.26 x 2 = 882.52 | 441.26 x 2 = 882.52 | 441.26 x 2 = 882.52 | 2647.56 | 72 units |
| | Total Area | 1482.66 | 1482.66 | 1482.66 | 4447.98 | 120 units |

பார்வை 6-ல் கண்ட சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின்படி வரைபடங்கள் TNCDBR - 2019-ன்படி விதிகளை நிறைவு செய்வதால் மேற்கண்டுள்ளவாறு பரப்புகளுடன் கூடிய உத்தேச குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.து.இ.(மம).எண்.02/2020 என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் / நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்க தொழில்நுட்ப ஒப்புதல் வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. As per G.O. (MS) No.18, MA & WS Department date:04.02.2019 "OSR portion should be earmarked and kept open to sky without any construction with the condition that the open space reservation should be utilized only as a park.
3. However the space may be maintain by the owner concerned subject to the supervision and monitoring of the concern Local body.
4. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

CHIEF ENGINEER
Project Monitoring Unit
Tamilnadu Slum Clearance Board
No: 5, Kamarajar Salai,
Chennai-600 005.

Scanned with CamScanner

நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

7. அரசாணை எண். 17 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள். 05.02.2016- ன்படி உத்தேச குடியிருப்புக் கட்டிடத்தின் Terrace தளத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு குறையாமல் சோலார் எனர்ஜி சிஸ்டம் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u> :

1. உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. இட அமைப்பு வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள 506.37 ச.மீ பரப்பளவு கொண்ட திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

CHIEF ENGINEER
Project Monitoring Unit
Tamilnadu Slum Clearance Board
No: 5, Kamarajar Salai,
Chennai-600 005.

Scanned with CamScanner

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகன ங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U Trap" அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FIY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.
13. கட்டிடம் கட்டப்படும் பொழுது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் வயரிங் செய்யப்பட வேண்டும்.
14. "The Tamil Nadu Government in G.O.MS.No.112, Housing & Urban Development Department, dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regularisation & Development) Act - 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or Building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with Real Estate Regulartory Authority".

பார்வை (4) மற்றும் (5) -ல் கண்ட அரசாணைகளின்படி பார்வை (8) ல் கண்ட கடிதம் மூலம் மனுதாரரிடமிருந்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம, விளம்பரப் பலகை கட்டணம் மற்றும் கூராய்வுக் கட்டணங்கள் ஆகியவை முழுமையாக பெறப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் முத்திரையிட்டு ஒப்புதலளிக்கப்பட்ட இரண்டு வரைபடத்தொகுப்புகள் இறுதி ஒப்புதலுக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

கட்டிட வரைபடத்திற்கு இவ்வுத்தரவில் கண்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இறுதி ஒப்புதல் வழங்கிட செயல் அலுவலர், போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

CHIEF ENGINEER
Project Monitoring Unit
Tamilnadu Slum Clearance Board
No: 5, Kamarajar Salai,
Chennai-600 005.

Scanned with CamScanner

கட்டிடத்திற்கு இறுதி ஒப்புதல் தொடர்பாக மனுதாரர் செயல் அலுவலர், போ. மீனாட்சிபுரம் பேரூராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
மதுரை மண்டலம்.

24/11/2020 24/11/2020

**இணைப்பு**

ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
இரண்டு தொகுப்பு.

**பெறுநர்**

செயல் அலுவலர்,
போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

**நகல்**

1. நிர்வாகப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம்,
மதுரை கோட்டம்,
எண்.169, கே.கே.நகர் பிரதான சாலை,
கே.கே.நகர்,
மதுரை - 625 020.

2. தொழில்நுட்ப வைப்பறை
(வரைபடங்கள் மற்றும் கடித நகல்) - 1

CHIEF ENGINEER
Project Monitoring Unit
[Tamil N]adu Slum Clearance Board
5, Kamarajar Salai,
Chennai-600 005.

Scanned with CamScanner

தேனி மாவட்டம் போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி செயல் அலுவலரது நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. பி.கங்காதரன்

ந.க.எண் : 16 / 2020 – 2021 நாள் : 22.05.2020

பொருள் : கட்டிட உரிமம் – தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர் தாலுகா – போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி – போ.மீனாட்சிபுரம் கிராமம் – சர்வே எண் 264/3,4–ல் உள்ள 4850.00 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் மாண்புமிகு பாரத பிரதமரின் PMAY – HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் – திட்டப் பகுதியில் உத்தேசமாக 120 குடியிருப்புகள் கட்ட – முன் அனுமதி நிபந்தனைகளுடன் வழங்கி – உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியம், மதுரை, ந.க.எண். 930/ BM.1 / MDU/TPS / 2019 நாள். 11.12.2019
2. மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 14467/2018/ஆ4 நாள். 03.07.2019
3. அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 04.06.2004
4. அரசானை எண்(நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் முறை நாள்.04.02.2019
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019/BA.2 நாள்.06.11.2019
6. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.6635/2019 நாள் 22.01.2020 (நுன்னிலை வரி, விளம்பர பலகை கட்டணம் மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்த கோரியது
7. நிர்வாக பொறியாளர் த.கு.மா. வாரியம், மதுரை கோட்டம் அவர்களின் ந.க.எண்.930/BM.1/MDU/TPS/2019 நாள்.22.01.2020 (நுன்னிலைவரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது)
8. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடித நாள்.27.01.2020
9. நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மதுரை கோட்டம் அவர்களின் ந.க.எண். 930/BM.2/TPS/MDU/2019 நாள் : 19.03.2020 அன்று கட்டிட வரைபட அனுமதி உரிமைக்கட்டணம் வங்கி வரவோலை மூலம் செலுத்தப்பட்டது.
10. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடித நாள்.07.05.2020
11. நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை கோட்டம் ந.க.எண்.930/BM2/TPS/MDU நாள்.18.05.2020.

********************

**உத்திரவு :**

பார்வை 1இல் கண்ட நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மதுரை அவர்களின் கடிதத்தில் தேனி மாவட்டம், போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி (தெற்கு) திட்டப்பகுதி 1



CHIEF ENGINEER
Project Monitoring Unit
Tamilnadu Slum Clearance Board
No: 5, Kamarajar Salai,
Chennai-600 005.

சர்வே எண்.264/3 மற்றும் 264/4–இல் உள்ள 4850 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மாண்புமிகு பாரத பிரதமரின் PMAY – HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தில் கட்டிடம் கட்டுவதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு தரைத்தள அனுமதி, உரிய கட்டிட உறுதிசான்று தாக்கல் செய்யும் பட்சத்தில் கூடுதல் தள அனுமதி தொடரல் உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 11.10.2020ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
2. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் உபயோகிப்போர் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மேல்நிலைத்தொட்டி வசதிகள் மற்றம் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
3. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
4. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்
5. அரசாணை எண்.341 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள். 03.11.0ன்படி செப்டிக் டேங்க்கில் "U Trap" அமைத்தல் வேண்டும்.
6. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FIY ASH BRICKS மற்றும் Meterials பயன்படுத்தப்பட வேண்டும்.
7. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.
8. இந்த உத்திரவு தமிழ்நாடு முனிசிபல் சட்டப்பிரிவுகளுக்கு உட்பட்டதாகும்.
9. அனுமதிக்கப்பட்ட வரைபடத்தினையும், உத்திரவினையும் எந்த நேரத்திலும் வேறு பரிசீலனைக்கும் வரும் பொழுது காண்பிக்கத்தக்கதாய் கட்டிடத்தின் பொது இடத்தில் வைக்கப்பட வேண்டும்.
10. பஞ்சாயத்து கட்டிட விதிகளுக்கும், முனிசிபல் கட்டிட விதிகளுக்கம் இந்த அனுமதி உத்திரவு செயல்படத் தகுதியானதென்று கூற முடியாது.
11. புதிய கட்டுமான இடம் மற்றவருக்கு ஆட்சேபகரமானதாக இருக்கக்கூடாது.
12. கழிவு நீர் செல்ல பாதுகாப்பான சாக்கடை சொந்த செலவில் சொந்த இடத்தில் கட்டப்பட வேண்டும்.
13. புதுக்கட்டிடத்தில் குடிபுகுமுன் இப்பேரூராட்சியின் மேற்படி இடத்தில் குடியிருக்கத் தகுதியான தென்று சான்றிதழ் பெற்று பின்னரே குடிபுக வேண்டும்.
14. சமையல் அறையில் புகைபோக்கி வைக்க வேண்டும்.
15. கட்டிடம் கட்டுமிடத்தில் ஏதும் வில்லங்கம் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தாங்களே பொறுப்பு ஏற்கவேண்டும். இப்பேரூராட்சி பொறுப்பில் இந்த அனுமதியை ஒரு ஆதாரமாக கருதக்கூடாது.



Attested

CHIEF ENGINEER
Project Monitoring Unit
Tamilnadu Slum Clearance Board
No: 5, Kamarajar Salai,
Chennai-600 005.

16. தரைப்பகுதிக்கும், கூரைப்பகுதிக்கும் (கவரின் உயரம்) குறைந்தது 10.5 அடிக்கு குறையாமல் உயரம் இருத்தல் வேண்டும்.
17. கட்டிட அடித்தளம் Pile foundation முறையில் அமைக்கப்பட வேண்டும்.
18. கட்டிட பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மை குறித்து வாரந்தோறும் போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி அலுவலகத்திற்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.
19. தரைத்தள கட்டுமான நிறைவில் நிர்வாகப் பொறியாளரிடம் இருந்து கட்டிட உறுதித்தன்மை குறித்த சான்று ( Stability Certificate ) தாக்கல் செய்து முதல் தள, 2ம் தள கட்டுமானத்திற்கான அனுமதியை தொடர வேண்டும்.
20. கட்டுமானப்பகுதியில் திரவக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ( Liquid Waste Management System ) அமைத்தல் வேண்டும். கட்டுமானம் தொடங்குவதற்கு முன் கட்டுமான தொழிலாளர் நலவாரியத்துக்கு செலுத்த வேண்டிய 1 சதவீத சந்தா தொகையை செலுத்த வேண்டும்.
21. பொதுத்திறவிடம், பூங்கா மற்றும் சாலை உள்ளிட்டவற்றிற்கான இடத்தை பேரூராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்ய வேண்டும்.
22. அனைத்து கட்டுமான நிறைவில் உரிய கட்டிட உறுதிச்சான்று மற்றும் மாவட்ட சுகாதார அலுவலரின் சான்று சமர்ப்பித்து கட்டிடத்திற்கு இறுதி அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

செயல் அலுவலர்
போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி
தேனி மாவட்டம்.

பெறுநர்
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியம்,
மதுரைக்கோட்டம்,
No. 169, கே.கே.நகர் பிரதானசாலை, மதுரை – 20.

நகல்.

1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள், மதுரை கோட்டம்
2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலம், தேனி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

CHIEF ENGINEER
Project Monitoring Unit
Tamilnadu Slum Clearance Board
No: 5, Kamarajar Salai,
Chennai-600 005.